# தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளநீர் சூழ்ந்துள்ள பகுதிகளை கனிமொழி கருணாநிதி எம்.பி. நேரில் ஆய்வு செய்தார்!











தூத்துக்குடி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழையின் காரணமாக வெள்ளநீர் சூழ்ந்துள்ள சூசைபாண்டியபுரம், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட தொழில் மைய அலுவலகம், இந்திய உணவுக் கழகம், பி&டி காலனி, ராஜீவ்நகர் மற்றும் பக்கிள் ஓடை கடலில் கலக்கும் பகுதியான திரேஸ்புரம் ஆகிய பகுதிகளுக்கு நேற்று நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு, விரைவாக வெள்ளநீரை அகற்ற உரிய நடவடிக்கை எடுக்க அலுவலர்களுடன் நாடாளுமன்ற கழகக் குழு தலைவர் கனிமொழி கருணாநிதி அவர்கள் ஆலோசனை மேற்கொண்டார். உடன் அமைச்சர் பெருமக்கள் திருமிகு.கீதா ஜீவன், அனிதா இராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம் பகவத், மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி மற்றும் பலர் உடனிருந்தனர்.

### திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை

## நவீன தொழில்நுட்பத்தில் கடல் சார் நடைபாதை பாலப்பணிகள்!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்தார்!




பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று (15.12.2024) கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலையிலிருந்து சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபம் வரை நடந்து செல்வதற்கான கண்ணாடி இழை தரைத்தள பாலத்தின் இறுதி கட்ட பணியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ், பொதுப்பணித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா, பொதுப்பணித் துறை பொறியாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

கன்னியாகுமரி, டிச.16-

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள், பொதுப்பணித்துறை அரசு கூடுதல் செயலாளர் மன்கத் ராம் சர்மா, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஆர்.அழகுமீனா, முன்னாள் அமைச்சர் மற்றும் பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் மனோ தங்கராஜ் ஆகியோர் முன்னிலையில் நேற்று (15.12.2024) கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழை கூண்டு பாலத்தினை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் கூறியதாவது:-

முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2000 ஆண்டு நிறுவப்பட்டு தற்போது வெள்ளி விழா காண இருக்கும் அய்யன் திருவள்ளுவர் சிலையும் விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் கடல்சார் நடைபாதை பாலப்பணிகள் ரூ.37 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது.

இப்பாலத்தின் நீளம் 77 மீட்டர் மற்றும் அகலம் 10 மீட்டர் கொண்ட Bowstring Arch Bridge (பவ்ஸ்ட்ரிங் ஆர்ச் பாலம்) ஆகும். இது நவீன தொழில் நுட்பத்தில் கடல் அரிப்பு, கடல் காற்றின் வேகம் போன்ற காரணிகளைக் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளது.

தற்போது விவேகானந்தர் பாறையினை கண்டுகளிக்கும் சுற்றுலா பயணிகள் மீண்டும் படகு மூலம் அய்யன் திருவள்ளுவர் சிலையினை காண செல்வதால் அதிக நேரம் விரயமாகின்றது. இந்நடைபாலம் அமைக்கப்படுவதால் சுற்றுலா பயணிகள் எளிதாக அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு செல்லலாம். இப்பாலத்தில் 2.5 மீட்டர் அகலமுடைய கண்ணாடி அடித்தளம் கொண்ட நடைபாதை அமைக்கப்படவுள்ளது. நடைபெற்று வரும் பாலப் பணிகளை சென்னை ஐ.ஐ.டி தொழில்நுட்ப வல்லுநர்களின் மேற்பார்வையில் நடைபெற்று வருகிறது.

#### வண்ண விளக்குகளால் அலங்கரிங்கப்படும்!

மேலும் டிசம்பர் 30 மற்றும் 31 அன்று கன்னியாகுமரியில் அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சி சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதில் பொதுப்பணித்துறை சார்பாக மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மாவட்ட நீதிமன்றம், மார்ஷல் நேசமணி மணிமண்டபம், பொதுவுடமை வீரர் ப.ஜீவானந்தம் மணிமண்டபம், சதாவதானி செய்குதம்பி பாவலர் நினைவு மண்டபம், பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், காந்தி நினைவு மண்டபம் உள்ளிட்டவைகள் வண்ண விளக்குகளால் அலங்கரிங்கப்படும்.

மேடை அமைத்தல் பணிகளும் பொதுப்பணித்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்படும். தற்போது திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை சுற்றுலா பயணிகள் நடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழை கூண்டு பாலப்பணிகள் 95 சதவீத பணிகள் முடிவுற்றுள்ளது. கடல் அரிப்பு, காற்றின்வேகம் போன்ற இயற்கை காரணிகளை கருத்தில் கொண்டு பணிகள் நடைபெற்று வருகிறது. அய்யன் திருவள்ளுவர் சிலை வெள்ளி விழா நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற தங்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பொதுப்பணித் துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நடைபெற்ற ஆய்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.பாலசுப்பிரமணியம், நெடுஞ்சாலை துறை கண்காணிப்பு ஆய்வாளர் பாஸ்கர், நெடுஞ்சாலைத்துறை கோட்ட செயற்பொறியாளர் சத்தியமூர்த்தி, நெடுஞ்சாலைத்துறை உதவி கோட்ட பொறியாளர்கள் ஜெரால்டு ஆண்டனி (நாகர்கோவில்), திருமதி.விஜயா (தக்கலை), வெனிஸ் (தோவாளை), பிரவீன் குமார் (குழித்துறை), உதவி செயற்பொறி யாளர்கள் முருகேசன் (கட்டடம் மற்றும் பராமரிப்பு), திருமதி.ராஜலெட்சுமி (மின்னியல்), பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக மேலாளர் ஆறுமுகம், கன்னியாகுமரி பேரூராட்சி தலைவர் குமரி ஸ்டீபன், துணை தலைவர் திருமதி.ஜெனஸ் மைக்கேல், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய துணை தலைவர்கள் சரவணன், தோவாளை ஊராட்சி ஒன்றியக்குழு உறுப்பினர் பூதலிங்க பிள்ளை, நெடுஞ்சாலைத்துறை உதவி பொறியாளர்கள் அரவிந்த் (நாகர்கோவில்), ரெஜ்வின் (தக்கலை), வட்டார மருத்துவக்குழு உறுப்பினர் பாபு, துறை அலுவலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

### நே.சிற்றரசு - தயாநிதிமாறன் - எம்.கே.மோகன் - ந.இராமலிங்கம் பங்கேற்பு!

## 136(அ) வட்டத்தில் துணை முதல்வர் பிறந்தநாள் - பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

### கார்த்திக் மோகன் - தமிழன் பிரசன்னா - சேலம் சுஜாதா - பேரரசன் சிறப்புரை! இரா. நவீந்திர குமார் அறிக்கை!

சென்னை, டிச.16-

106(அ)வது வட்ட கழக தோழர்களுக்கு வட்ட கழகச் செயலாளர் இரா .நவீந்திர குமார் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சென்னை மேற்கு மாவட்டம் அண்ணா நகர் தெற்கு பகுதி 106(அ ) வட்ட கழகச் செயலாளர் இரா .நவீந்திர குமார் தலைமையில் இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக்கூட்டம் இன்று (16.12.2024 திங்கள் கிழமை) மாலை 6.00 மணி அளவில் கோ. சு. மணி தெருவில் நடைபெறுகிறது.

இதில் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளரும் பெரு நகர சென்னை மாநகராட்சி பணிகள் குழு தலைவர் நே .சிற்றரசு ,மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், அண்ணாநகர் சட்டமன்ற உறுப்பினரும், தலைமை செயற்குழு உறுப்பினருமான எம்.கே.மோகன், அண்ணாநகர் தெற்குப் பகுதி செயலாளரும், பெருநகர சென்னை மாநகராட்சி ஆளுங்கட்சி தலைவருமான ந.இராமலிங்கம், மாநில தகவல் தொழிட்நுட்ப அணி துணை செயலாளர் கார்த்திக் மோகன், அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் தமிழன் பிரசன்னா மற்றும் தலைமை கழகப் பேச்சாளர்கள் சேலம் சுஜாதா, பேரரசன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகின்றனர்.

எனவே இந்த பொதுக்கூட்டம் நமது 106(அ)வது வட்டத்திற்குட்பட்ட அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்ட கழக செயலாளர் இரா.நவீந்திர குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

### பெரம்பூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் -

## வட்டச் செயலாளர்கள் அவசரக் கூட்டம்!

### பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள்!!

சென்னை,டிச.16-

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் மற்றும் வட்ட செயலாளர்கள் கூட்டம் இன்று (16.12.2024 திங்கட்கிழமை) மாலை 5 மணிக்கு பிளாட் எண் 221 , 8வது குறுக்கு தெரு, எம்கேபி நகர் பகுதி செயலாளர் இல்லத்தில் நடைபெறுகிறது.

ஆகவே பெரம்பூர் வடக்கு பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்:

1. 19.12.2024 அன்று துணை முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நடைபெற உள்ள மாபெரும் இசை அரங்கம்.

இவ்வாறு பகுதி செயலாளர் அ.முருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### பா.ஜ.க.வை எதற்குமே கண்டிக்காமல்

## வாய்ச்சவடால் விட்டுக்கொண்டிருக்கிறார் பழனிசாமி!

### அமைச்சர் எஸ்.ரகுபதி பதிலடி!



சென்னை, டிச.16-

“பா.ஜ.க.வை எதற்குமே கண்டிக்காமல் வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி” என்று சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் பதிலடி கொடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:

முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல ‘வாழைப்பழ காமெடியை’ போல அறிக்கையிலும் சரி மேடையிலும் சரி சொன்னதையே சொல்லிக் கொண்டிருக்கிறார் எதிர்கட்சித் தலைவர் பழனிசாமி! திமுக அரசின் நலத்திட்டங்கள் மற்றும் சமத்துவ-சமூக மேம்பாட்டு செயல்திட்டங்களால் தமிழ்நாட்டு மக்கள் முதலமைச்சருக்கான சிம்மாசனத்தை அளித்திருக்கிறார்கள். குரலை உயர்த்தி கைகளைச் சுழற்றி பேசினால் மக்களை ஏய்த்து, திமுகவை வீழ்த்திவிடலாம் என்று பகல் கனவு கண்டு கொண்டிருக்கிறார் பழனிசாமி! ஆட்சிக்காகவும் அதிகாரத்திற்காகவும் சசிகலா தொடங்கி, ஓபிஎஸ் வரை ஒவ்வொருவராக காலை வாரிவிட்ட நீண்ட துரோக வரலாறு உங்களுடையது! ஆட்சிக்காக பாஜகவிடம் அண்டிப் பிழைத்து மாநிலத்தின் உரிமைகளை எல்லாம் அடகு வைத்துவிட்டு இப்பொழுதும் கூட பாஜகவை எதற்குமே கண்டிக்காமல் ‘வலிக்காமல் வலியுறுத்திவிட்டு’ மேடையில் வாய்ச்சவடால் விட்டுக் கொண்டிருக்கும் மிஸ்டர் கோட்டைச்சாமியை யாராவது எழுப்பிவிடுங்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தமது சமூக வலைத்தளத்தில் பதி விட்டுள்ளார்.